

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.எ, தலைமையில் கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி.வாசுதேவன் இல்ல திருமண வரவேற்பு விழா அழைப்பிதழை வழங்கினார்கள்.

### சென்னை – ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில்

# தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து – அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்!

சென்னை, பிப். 20-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.02.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க த்தில் 23வது தேசிய மாற்றுதிறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்தார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கம் இணைந்து நடத்தும் இப்போட்டி பிப்ரவரி 18 முதல் 20 வரை சென்னையில் ஜவஹர்லால் நேரு விளையாட்ட ரங்கத்தில் நடைபெறவுள்ளது. தேசிய மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா முழுவதிலும் இருந்து 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 1,476 பாராதடகள வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டு, 155 போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர். இப்போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த 185 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

தொடக்க விழாவில் வீரர், வீராங்கனைகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்து ஒலிம்பிக் முறையில் இடம் பெற்ற சுடர் ஓட்டத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டிக்கான சுடரை வழங்க பாரீஸ் 2024 பாராலிம்பிக்ஸில் தங்கப் பதக்கம் வென்ற நவ்தீப் சிங் சுடரை மைதானத்தில் ஏற்றிவைத்தார். பாரீஸ் 2024 வெள்ளிப் பதக்கம் வென்ற அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாடு பாரா பாட்மிண்டன் வீராங்கனை செல்வி. துளசிமதி முருகேசன் அனைத்து பங்கேற்பாளர்களின் சார்பாக விளையாட்டு வீரர்களின் உறுதிமொழியை வாசிக்க அனைத்து வீரர், வீராங்கனைகளும்பின்தொடர்ந்து உறுதிமொழி ஏற்று கொண்டனர்.

பின்னர் துணை முதலமைச்சர் அவர்கள் தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியை துவக்கி வைக்க, விளையாட்டுத் திறன் மற்றும் உணர்வைக் குறிக்கும் வகையில் 500 பலூன்கள் பறக்கவிடப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் தலைவர் பத்ம பூஷன் தேவேந்திர ஜஜாரியா, இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் துணைத் தலைவர் சத்ய பிரகாஷ் சங்வான், இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் பொதுச் செயலாளர், ஜெயவந்த் குண்டு ஹமானவர், பாராதடகளவிளையாட்டு சங்க தலைவர் சத்ய நாராயணா, அர்ஜுனா விருது மற்றும் பாராலிம்பிக்ஸில் தங்க பதக்கம் பெற்ற பாரா தடகள வீரர் பத்மஸ்ரீ டாக்டர் மாரியப்பன் தங்கவேலு, இந்திய பாரா தடகள வீராங்கனை பத்மஸ்ரீ திருமதி தீபா மாலிக், தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.கிருபாகர ராஜா, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பாரா தடகள வீரர், வீராங்கனை கலந்துகொண்டனர்.

### கடலூர் மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் வேண்டுகோள்!

கடலூர் பிப். 20.

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் நாளை பிப்ரவரி 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் கடலூர் மாவட்டதிற்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் வேப்பூர் திருப்பெயர் ஜெயப்பிரியா பள்ளி அருகில் நடைபெறும் "பெற்றோர்களைக்



கொண்டாடுவோம்'' எனும் மைய்க்கருத்துடன் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக மண்டல மாநாட்டில், கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். அதுசயம் கடலூர் மேற்கு மாவட்ட தி. மு.க. சார்பில் நாளை 21.02.2025 வெள்ளிக்க்கிழமை இரவு நெய்வேலி ஆர்ச் கேட் அருகிலும் 22 .02.2025 சனிக்கிழமை அன்று காலை விருத்தாசலம் பெரியார் நகரிலும் கடலூர் மேற்கு மாவட்ட தி. மு.கழகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந் நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர் கழக, செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், தொ.மு.ச நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கடலூர் மாவட்டத்திற்கு முதல்வர் வருகை!

# பண்ருட்டி நகரக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

## நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்: க.இராஜேந்திரன் சிறப்புரை!

கடலூர், பிப்.20-

பண்ருட்டி நகர கழகம் சார்பில், நகர செயற்குழு கூட்டம், 18.02.2025, செவ்வாய்க் கிழமை, காலை 10 மணியளவில், பண்ருட்டி கே.எஸ்.ஆர்.சக்கரபாணி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பண்ருட்டி நகர கழக செயலாளர், நகரமன்ற தலைவர் க.இராஜேந்திரன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். நகர அவைத் தலைவர் ஆர்.ராஜா வரவேற்புரையாற்றினார்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக துணை செயலாளர்கள் ஆர்.எஸ். எம்.தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஜி. கதிர்காமன், நகர பொருளாளர் ஆர்.கே.ராமலிங்கம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர்,

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம்குமார், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சங்கர், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் மகாலிங்கம், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பாரி,

நகர துணை செயலாளர்கள் சீனிவாசன், சசிகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் லோகநாதன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஏழுமலை, செந்தில் குமார்,

இளைஞரணி அமைப்பாளர் சம்பத், துணை அமைப்பாளர் பாலச்சந்தர், பார்த்திபன், ராஜா, ராஜா முகமது, விக்கி, ராஜா மற்றும் வார்டு செயலாளர்கள் வட்ட பிரதிநிதிகள் நகர மன்ற உறுப்பினர்கள் கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

வருகின்ற 21, 22 கடலூர் மாவட்டத்திற்கு அரசு மற்றும்பல்வேறுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்கும் விதமாக பண்ருட்டி நகர கழகத்தின் சார்பாக 33 வார்டுகளிலிருந்து கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு அளிப்பது சம்பந்தமாக

கடலூர் மேற்கு மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22 ஆம் தேதி விருதாச்சலம் வருகை தரும் போது பண்ருட்டி நகரத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள இடமான விருதாச்சலம் பாலக்கரை பகுதியில் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்களின் தலைமையில் கலந்து கொள்ள பண்ருட்டி நகரத்தில் சார்பில் வாகன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. பண்ருட்டி நகரிலிருந்து கழகத் தோழர்கள் அதிக அளவில் குறைந்தபட்ச 3000 பேர் கலந்து கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

வருகிறேன் 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் தமிழக துணை முதல்வர் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திருமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திட்டத்தின் படி இலக்கான 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற பண்ருட்டி நகரத்தில் கழகப் பணியாற்றி அதிக வாக்குகள் பெற்றுத் தருவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வருகிற மார்ச் 1ம் தேதி தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியை, பண்ருட்டி நகரத்தில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் வழங்கி வார்டு தோறும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன் நன்றியுரையாற்றினார்.

# தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்த நிதியை உடன் வழங்கிட வேண்டுமென்பது காலத்தின் கட்டாயம் - அரசியல் நிர்ப்பந்தம்!

ஒன்றிய அரசின் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் வாரணாசியில் நடைபெற்ற காசிதமிழ்ச்சங்கமம் நிகழ்ச்சியில் முன்கூட்டித் திட்டமிட்டதன் வெளிப்பாடாக புதிய கல்விக் கொள்கையினை(NEP) ஏற்றுக் கொள்ளாத தமிழ்நாடு அரசுக்கு, ஒன்றிய அரசின் பள்ளிக்கல்வியின் தரத்தை மேம்படுத்தும் ஒருங்கிணைந்த ஒன்றிய கல்வி அமைச்சகத்துறை சார்ந்த திட்டமான "சமக்ரா சிக்ஷா அபியான்"(Samagva Shiksha Scheme)திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதியை வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். அதுவும் காசிதமிழ்ச்சங்கமம் விழா என்பது புதிய கல்விக் கொள்கையை பற்றிய கருத்தரங்கமல்ல. மாறாக, காசிதமிழ்ச்சங்கமம் விழா என்பது ஓர் கலாச்சார நிகழ்ச்சியாகத்தான் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, அந்த நிகழ்ச்சியில் ஒன்றியத்தின் கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசின் கொள்கை நிலைப்பாட்டை பற்றி விமர்சித்து, ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான், மேலே குறிப்பிட்ட அந்தத் திட்டத்தின் அடிப்படையிலான நிதியினை வழங்க முடியுமென எச்சரிக்கை விடுத்திருப்பது கூட்டாட்சி முறைக்கு எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. இந்திய அரசியல் சட்டப்படி இந்தியா என்பது மாநிலங்கள் இணைந்த கூட்டாட்சிதான். மாநிலங்களின் எல்லைகளையும், ஒன்றிய அரசின் நேரடி நிர்வாகத்தில் உள்ள நிலப்பகுதிகளின் எல்லைகளும் இணைந்துதான் இந்திய ஒன்றியத்தின் எல்லைகளாகுமென இந்திய அரசியல் சட்டத்தின் முதல் பிரிவு விளக்கமளிக்கிறது. ஒன்றிய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது நீங்கலாக, ஒத்திசைவுப் பட்டியல் (concurrent list) என்ற அதிகாரப் பொதுப் பிரிவும் மூன்றாவது பட்டியலாக இடம்பெற்றுள்ளது. கல்வி என்பது குறித்த அதிகாரம், 1976ம் ஆண்டுக்கு முன்னர் மாநில அதிகாரப் பட்டியலில்தான் இருந்தது. ஆனால், அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்ட காலகட்டத்தில்தான், கல்வி குறித்த அதிகாரம் ஒத்திசைவுப் பட்டியலுக்கு (concurrent list) 42வது அரசியல் சட்டத் திருத்தம் மூலம் மாற்றப்பட்டது.

எனவே, கல்வி குறித்த எத்தகைய சட்ட, திட்டங்களானாலும் மாநில அரசுகளின் ஒப்புதல் தேவை என்பதோடு, மாநில அரசுகளின் மொழிக் கொள்கை குறித்து சிறப்புக் கவனம் தேவை என்பது அவசியமாகிறது. மொழிவாரி மாநிலங்கள் 1956ல் பிரிக்கப்படுவதற்கு என்ன காரணம்? இந்திய ஒன்றியத்தில் அரசியல் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் குறிப் பிட்டுள்ளபடி 18 மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மொழிக் குடும்பத்திற்கும் வேறுபட்ட கலாச்சாரம், பண்பாடு பன்னெடுங்காலமாக தொன்றுதொட்டுப் பின்பற்றப்படுகிறது. குறிப்பிட்ட மொழி பேசும் மக்களின் தனித்தன்மைகள் எந்தச் சூழ்நிலையிலும் உருக்குலைத்து விடக்கூடாது என்ற தொலைநோக்குப் பார்வையுடன்தான் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மொழி குடும்பத்தின் மீதும் பிறமொழி ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதோடு, எந்த வடிவத்திலும், எந்த முறையிலும், பிறமொழி திணிப்பு அல்லது ஆதிக்கம் என்றும் இருக்கக்கூடாது என்பதோடு, ஒரு மொழியின் மீது, இன்னொரு மொழி ஆதிக்கம் செலுத்த முற்பட்டால், பாதிப்புக்குள்ளான மொழி பேசும் மக்கள், தங்களின் தனித்தன்மைகளையும், மொழியையும் பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு அவர்களது உள்ளங்களில் பிரிவினைச் சிந்தனைகள் உருவாகும் என்பதற்காகத்தான்,



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர் நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபொழுது இருமொழிக் கொள்கையைச் சட்டமாக்கினார். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருமொழிக் கொள்கையை உருவாக்கி சட்டமாக்கியதற்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அந்தக் கோட்பாட்டை உறுதியாகக் கட்டிக் காப்பாற்றி யதற்கும் அடித்தளமாக இருந்த தளங்கள்தான் மிகப்பெரிய மொழிப் போராட்டக் களங்களாகும் என்பது வரலாறுகளாகப் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இந்தி மொழிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பானதல்ல. ஆனால், இந்தி மொழித் திணிப்பிற்கு என்றும் எதிர் நிலையில் உள்ளதுதான் "திராவிட மாடல் ஆட்சியுமாகும்". எனவே, இந்திமொழித் திணிப்பு என்பது எந்த வடிவத்தில் வந்தாலும், அந்த மொழியின் ஆதிக்கத்தை தடுக்கும் வகையில்தான் "திராவிட மாடல்" ஆட்சியின் கொள்கையும், ஆட்சிமுறையும் அமையும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி முதன்முதலாக அமைக்கப்பட்ட பொழுது இருமொழிக் கொள்கை சட்டமாக்கப்பட்டது. இந்தக் கொள்கைமுடிவு என்பது எதிர்காலத்தில் இந்தி மொழி திணிக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகும் என்பதை எண்ணிப் பார்த்து, அதனைத் தடுத்திடும் தொலைநோக்குடன்தான் இருமொழிச் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்தி மொழியை ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக்கிட வேண்டும் என்ற தீவிரமான முழவுடன், அதற்கு முன்னேற்பாடாக ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளிலும் இந்தி மொழி படிப்படியாக புகுத்தப்படுவதை யாராலும் மறுக்கவியலாது. எனவே, ஒன்றிய அரசு மெல்ல மெல்ல சில கல்வி சார்ந்தத் திட்டங்களை அறிவிப்பதும், அந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதும், மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை பெற்றிட வேண்டுமெனில், இந்தி மொழிச் சார்ந்தத் திட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மறைமுகமாக இந்தி மொழியைத் திணிக்கும் முயற்சியில் தொடர்ந்து நடைபெற்று கொண்டுதான் இருக்கிறது.

இதன் ஒரு கட்டமாகத்தான், இந்தத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 2152 கோடி நிதியை ஒன்றியத்தின் புதிய தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் விடுவிக்கப்படுமென ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். ஒன்றிய கல்வித்துறை அமைச்சரின் இந்த எச்சரிக்கை இந்திய அரசியல் சட்டத்தினுடைய நோக்கங்களுக்கு முற்றிலும் முரண்பட்டது என்பதோடு, வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்ற இந்திய ஒற்றுமைக்கு அடித்தளமான இந்தக் கோட்பாட்டை தகர்த்துவிடும் முயற்சியாகத்தான் ஒன்றிய கல்வி அமைச்சருடைய எச்சரிக்கையை அறிவார்ந்த மக்களால் மதிப்பீடு செய்கிறார்கள். இந்தப் புதிய திட்டத்தின் கீழ் ஒன்றிய அமைச்சகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை தமிழ்நாட்டு மக்களுக்கு வந்துசேர வேண்டுமென்பது தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த முடிவாகும். இதற்கிடையில் புதிய கல்விக் கொள்கையில் மாணவர்கள் மூன்றாவது மொழி தேர்ந்தெடுப்பதில் முன்னர் இருந்த சட்ட நிர்ப்பந்தம் தற்பொழுது பிரதமர் நரேந்திரமோடி தலையீட்டால் மூன்றாவது மொழி தேர்வு கட்டாயம் என்பதிலிருந்து தளர்த்தப்பட்டு, மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படை யில் எந்த மொழியையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என மாற்றப்பட்டிருப்பதாக பாரதிய ஜனதாக் கட்சியினுடைய தமிழ்நாட்டின் தலைவர் அண்ணாமலை ஒரு செய்திக் குறிப்பில் தெரிவிக்கிறார்.

மொழிப் போராட்டக் களத்தில் தமிழ் மொழியின் மீது பிறமொழி ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்து போராடுவதற்கு வேறுபாடுகளை மறந்து, அனைத்து மக்களும் ஒன்றிணைந்து பல்வேறு போராட்டங்களை, பல்வேறு காலகட்டங்களில் களம் கண்டவர்கள்தான் தமிழ்நாட்டு மக்கள். எனவே, ஒன்றிய பிரதம அமைச்சரின் தலையீட்டால் மூன்றாவது மொழி இந்தி என்பது கட்டாயம் என்பதை மாற்றி, மூன்றாவது மொழியை தேர்ந்தெடுப்பது மாணவர்களின் விருப்பம் (Option) என மாற்றியிருக்கிறார் என்று அண்ணாமலை தெரிவிக்கிறார். இங்குதான் விருப்பம்(Option) என்ற வண்ணம் பூசப்பட்ட நஞ்சு, இந்த மாற்றத்தில் இரண்டறக் கலந்திருக்கிறது. விருப்பம்(Option) என்ற சூழ்நிலையில் மறைமுகமாக மூன்றாவது மொழியாக இந்தியைக் காலப் போக்கில் கட்டாயமாக்கிவிடுவார்கள் என்பது எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். எனவேதான், ஒன்றிய அரசின் இந்த வஞ்சக ஏற்பாட்டை தொடக்கத்திலேயே தடுத்திட வேண்டுமெனக்கருதி, தமிழக முதல்வர் தொடக்கத்திலேயே இதைக் கடுமையாக எதிர்க்கத் தொடங்கியுள்ளார்கள். "இந்தியா" கூட்டணிக் கட்சிகளும் ஆர்ப்பாட்டத்தை தொடங்கியிருக்கின்றனர்.

எனவே, ஒன்றிய அரசும், கல்வித்துறை அமைச்சரும் கடந்த கால தமிழ்நாட்டின் மொழிப் போர் வரலாற்றை புரிந்து கொண்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை உடன் அனுப்பி வைக்க வேண்டுமென்பதுதான் தமிழ்நாட்டு மக்களின் விருப்பமும், அரசியல் சட்டத்தின் நோக்கமுமாகும். தமிழ் நாட்டில் அரசியல் சட்டத்தினுடைய வரம்புகளையும், எல்லைகளையும் மீறி தான் பதவியேற்கும்போது கொடுத்த உறுதிமொழியையும் தகர்த்துவிட்டு தன் விருப்பப்படி தனியாட்சி நடத்திக் கொண்டிருக்கும் ஆளுநர் ரவியை இன்னும் ஆளுநர் பொறுப்பில் வைத்துக்கொண்டு ஒன்றிய கல்வி அமைச்சர் சட்டப்படி ஆட்சி (Rule of Law) என்று பிரகடனப்படுத்துவது ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் அமைச்சர் தர்மேந்திர பிரதானின் நல்ல நகைச்சுவையாகத் தான் கருதமுடிகிறது.



மேட்டுப்பாளையம் தொகுதி பிளிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட ஒன்னிப்பாளையம் பகுதியைச் சார்ந்த சண்முகம் என்பவரின் மகன் 12ம் வகுப்பு படிக்கும் ஹேம்நாத் (வயது 14 ) என்பவர் இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டதையடுத்து கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி முன்னிலையில் ,கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ரூபாய் 60 ஆயிரம் நிதியுதவி வழங்கினார். இந்நிகழ்வில் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர் ஜெயக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி. சுப்பிரமணியம்,நகர மன்ற தலைவர் உஷா வெங்கடேஷ், காரமடை நகரச் செயலாளர் வெங்கடேஷ் , மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பா. ராமமூர்த்தி, சுற்றுச்சூழல் அணி துணை தலைவர் கே.மனோகரன், மாணவரணி அமைப்பாளர் அந்தோணி ராஜ், இலக்கிய அணி அமைப்பாளர் ராஜேந்திரன், நெசவாளர் அணி தலைவர் கணேஷ் மூர்த்தி, காரமடை நகர அவைத் தலைவர் ரவிகுமார் ஆகியோர்உடன் இருந்தனர்.